அருகில் கிணறு வெட்டி அதன் மூலமாகவோ அந்த மக்களுக்கு நல்ல குடிதண்ணீர் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியவள்ளிக்குளம் அருகில் புதிய திறந்தவெளிக் கிணறு அமைத்து குடிநீர் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 327, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

327—

குடிநீர் வசதி

***5563—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், சஞ்சீவராயன் கோவில் புதுநகரில் கொத்தடிமையிலிருந்து மீட்கப்பட்டவர்கள் வாழும் பகுதியில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து குடிநீர் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்தக் குடியிருப்புப் பகுதி சுமார் 250 மக்கள்தொகை உள்ள பகுதி. இதற்கு குடிநீர் முறையாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும் குடிநீர் தேவை என்று அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்த ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலரால் மேலும் குடிநீர் வழங்குவதற்கு 4 கையிறைப்பான்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியத்திலுள்ள ஆதமங்கலம் என்ற

கிராமத்தில் பல ஆண்டுகளாகக் கொத்தடிமையாக இருந்த சுமார் 60 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் சென்ற ஆட்சிக் காலத்தில் மீட்கப்பட்டு அவர்கள் சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எடமணல் ஊராட்சியில் உள்ள சஞ்சீவராயன்கோவில் புதுநகர் என்ற இடத்தில் குடியமர்த்தப்பட்டார்கள். பிறகு, அவர்கள் குடியிருந்து வரும் பகுதிகளுக்கு எந்த ஓர் அடிப்படை வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை. 'ஆயிரத்தில் ஒருவன்' என்ற திரைப்படத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் அடிமைகளுக்காகப் போராடி வெற்றி கண்டதைப் போல அவரது வழியில் ஆட்சி நடத்தி வருகின்ற அம்மா அவர்களின் அரசு, சீர்காழி தொகுதியில் கொத்தடிமைகள் குடியிருக்கும் பகுதிகளுக்கு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து, குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி, சமுதாயக் கூடம் மற்றும் சாலை வசதிகள் செய்து கொடுக்க முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின் பேரில் இந்தப் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 328, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

328—

பொருட்கள் வழங்குதல்

***6405—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு என்னென்ன பொருட்கள் வழங்கப்படுகின்றன?

(ஆ) வேறு பொருட்கள் வாங்கினால்தான் அரிசி வழங்கப்படும் என்ற நிபந்தனை ஏதேனும் உள்ளதா?